[2nd December 1970

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நடவடிக்கை எடுக்கப் படுகிறது. அனுபவம் என்னவென்றால்,

Experience has shown that in many cases passengers declare themselves to be covered under the contract. They are reluctant to give a statement to establish the breach of permit conditions.

பயணம் செய்கிற பயணிகள் உண்மை நிலவரத்தைப் பற்றிய ஸ்டேட் மெண்ட் கொடுக்க முன்வராத காரணத்தால்தான், இதுபோன்ற தவறு கள் நடக்கும்போது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக் கிறது. இருந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த பஸ்களுக்குக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறோம். இந்தத் தவறுகளைக் குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். ராகவானந்தம் : அப்படி என்றால் சி.ஐ.டீக்களையே பிரயாணிகளாக அனுப்பி அவர்களிடமிருந்து ரிபோர்ட் வாங்கி தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மாண்புமிகு உறுப் பினர் அவர்களையே சி.ஐ.டியாக எடுத்துக் கொள்ளத் தயாராக இருக் கிறேன்.

Tamil Nadu State Transport Department

*37. Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether there is any proposal to decentralise the administration of the Tamil Nadu State Transport Department ; and

(*b*) if so, the details thereof ?

தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத் துறை

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத் துறையின் நிர் வாகத்தைப் பரவலாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) வும் (இ) யும் : பேரவைமுன் விவர அறிக்கை† ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

† Printed as Appendix II

2nd December 1970]

திரு. ஜி சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு அரசுப் பேருந்துகளில் அதுவும் குறிப்பாக சென்னை மாநகரத்தில் ஓடுகின்ற பேருந்துகள் அதிகமான புகையைக் கக்கிக்கொண்டு செல்கின்றன. ஒரு இடத்தில் கார்த்திகைப் பொறி மாதிரி நெருப்பைக் கக்கிக்கொண்டு செல்வதை நான் பார்த்தேன். புகை கக்கிக்கொண்டு செல்வதால் பாதசாரிகளுக்கும், நெரிசல் உள்ள இடங்களில் உள்ளவர்களுக்கும் சுகாதாரக் கேட்டை உண்டுபண்ணும் என்பதை எண்ணி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மூலக் கேள்வி decentralization ஐப் பற்றியது. சில வேளைகளில் பஸ்கள் புகையைக் கக்கிக்கொண்டுதான் போகின்றன. அதைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கீழே புகை போகாமல் மேல் நோக்கிப் போவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக அரசாங்கத்தில் ஒரு பெரிய திட்டத்தைப் பரிசீலித்துக்கொண்டு வருகிறோம். அதற்கு சுமார் ரூ. $6\frac{1}{2}$ கோடி தேவையாக இருக்கிறது. இப்போது நேஷனலைசேஷன், ரிப்ளேஸ்மெண்ட், ஆக்மெண்டேஷன் ஆகியவற்றை அமுலாக்குவதற்கு ரூ. $6\frac{1}{2}$ கோடி வேண்டும். இப்போது நமது நிலைமை ரூ. 3 கோடிதான் அனுமதிக்கிறது. மேற்கொண்டு ரூ. $3\frac{1}{2}$ கோடி கமர்ஷியல் பாங்கு மூலமாகவும், மத்திய அரசின் மூலமாகவும் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். நிச்சயமாக ரூ. 6 1/2 கோடி கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அது கிடைக்கும்போது, அதிகமான பஸ்களை விடுவதற்கு வசதி ஏற்படும். அப்போது புகையில்லாமல் போகும் வண்டிகள், ஓடும் நாம் மொத்தம் 2 ஆயிரம் பஸ்கள் வைத்திருக்கிறோம். சென்னை நகரத்தில் பத்து லட்சம் பேருக்கு மேல் பிரயாணம் செய்கிறார்கள். இது பெரிய பிரச்னை. புகை கக்குவது போன்ற சிறிய பிரச்னைகளை வைத்துக் கொண்டு பெரிதுபடுத்தக் கூடாது. நல்ல ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. எஸ். ராகவானந்தம் : பஸ்களில் வரும் புகையை விட நிலக்கரியில் ஓடுகின்ற ரயில் இன்சினில் அதிகமாகப் புகை வருவதால், அப்படி வராமல் தடுக்க மத்திய அரசிற்கு மாநில அரசு கடிதம் எழுதுமா ?

மிஸ்டர் சேர்மன் : அது சென்ட்ரல் கவர்மெண்டைப் பொறுத்தது.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா: ரயிலில் புகை வருவதைப் பற்றி அதிகமாக எனக்குத் தெரியாது. நண்பர் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்திருக்கிறார். அவருக்கு அதுபற்றி நன்றாகத் தெரியும்.

Co-operative Irrigation Society, Agaram

*38. *Q.*—THIRU M. AIYASWAMY, THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :